| i. ........................................ | i. ........................................ |
| ii. ........................................ | ii. ........................................ |
| iii. ........................................ | iii. ........................................ |

மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியென உறுதிப்படுத்துகிறேன்.

.................... ..........................,

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

தங்களுடைய விண்ணப்பப்படிவத்தினை பாடநெறி தெரிவு செய்யப்பட்ட மாவட்டத்தின் உதவிப்பணிப்பாளரின் முகவரிக்கு 2017.06.30 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்

**பயிற்சிநெறியில் இணைந்துகொள்ளுவதற்குத் தேவையானஆகக்குறைந்த தகைமை**
**9 ஆம் வருடத்தில் சித்தி பெற்றிருத்தல்**

- கட்டிட நிர்மாண தொழில்நுட்பம் (மேசன்)தேசியசான்றிதழ்
- நீர்க்குழாய் பொருத்துநர் - தேசிய சான்றிதழ்
- சூழல் அலங்காரவியல் - தேசிய சான்றிதழ்
- மர பூ செதுக்குதல்
- மர வேலை தொழில்நுட்பம்
- தளபாட உற்பத்தி தொழில்நுட்பவியலாளர் (தளபாடம் - 06)
- சாரதிப்பயிற்சி (இலகுரக) வாகனம் 18 வயதுக்குமேல்
- சாரதிப்பயிற்சி (பார) வாகனம் 21 வயதுக்குமேல்
- தன்னியக்க வாகன தகர வேலைசெய்பவர்
- தன்னியக்க வாகன வர்ணம் பூசுபவர்
- மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவியலாளர்
- முச்சக்கரவண்டி தொழில்நுட்பவியலாளர்
- தொழில்சார் உணவு மற்றும் குடிபான சேவை
- தோல் பாதணிகள் வடிவமைப்பு
- அலுமினியம் பொருத்துநர்
- ஒட்டுவேலை செய்பவர் (06 மாதம்)
- வரைபட கலைஞர்
- அழகுக்கலை நிபுணர் - தேசிய சான்றிதழ்
- கேச அழகுபடுத்துநர் - தேசிய சான்றிதழ்
- அதிவேக தையல் இயந்திர இயக்குநர்
- அதிவேக தையல் இயந்திர திருத்துநர்
- தையல் (பெண்கள் மற்றும் சிறுவர்கள்)
- தையல் (ஆண்கள்)
- திரைச்சீலை பிரிண்டிங்
- குழந்தை பராமரிப்பு

**க.பொ.த (சா.தரம்) 06 பாடங்களில் சித்திபெற்றோர்**

- கட்டிட நிர்மாண முகாமைத்துவம்
- படவரை கலைஞர்
- மோட்டார் வாகன தொழில்நுட்பம் - தேசிய சான்றிதழ்
- மோட்டார் வாகன மின்னியலாளர் - தேசிய சான்றிதழ்
- மோட்டார் வாகன வாயு பொருத்துநர் - தேசிய சான்றிதழ்
- மின்னியலாளர் - தேசிய சான்றிதழ்
- மின் உபகரணங்கள் திருத்துநர்

**பயிற்சிநெறியில் இணைந்துகொள்ளுவதற்கு தேவையான ஆகக்குறைந்த தகைமை**
**க.பொ.த(சா.தரம்) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்**

- மின்னிணைப்பாளர் (6 மாதம்)
- சமையற்கலையாளர் (6 மாதம்)
- வீட்டுமின் உபகரணங்கள் திருத்துநர், மின்னியல் (6 மாதம்)
- அலுமினியம் பொருத்தும் தொழில்நுட்பம் (6 மாதம்)
- மின்னியல் மோட்டார் வைண்டிங் தொழில்நுட்பம்
- கட்டிட நிர்மாண, தொழில்நுட்பம் (மேசன் மற்றும் நீர்க்குழாய் பொருத்துநர்)

**க.பொ.த (சா.தரம்) 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்**

கணினி வன்பொருள் தொழில்நுட்பம்
மோட்டார் வாகன தொழில்நுட்பம்
கணினி வடிவமைப்பாளர்
ஆடை வடிவமைப்பாளர்
ஆடைத் தொழிற்சாலைத் தரக் கட்டுப்பாட்டாளர்
ஆடைத் தொழிற்சாலை உற்பத்தி மேற்பார்வையாளர்
பப்ரிக் கட்டர்

**க.பொ.த. (சா.தரம்) ஆங்கிலம் மற்றும் கணிதம் அடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்**

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT)

க.பொ.த. (சா.தரம்) ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் பாடத்தில் விசேட சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

கணிய அளவையாளர் சான்றிதழ் பாடநெறி

**க.பொ.த. (சா.தரம்) சித்தியுடன் க.பொ.த. (உ.தரம்) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்**

விண்ணப்பங்களை 2017.06.30 ஆந் திகதிக்கு முன்பாக தெரிவு செய்யப்பட்ட மாவட்ட உதவிப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவும்.

| பாடநெறி இல. | தொழிற்பயிற்சி அதிகார சபையின் துறைகளுக்கேற்ப நடைபெறும் பாடநெறிகள் | பயிற்சிக்காலம் (மேலதிக பயிற்சியுடன்) | NVQ level |
|---|---|---|---|
| | மோட்டார் வாகன தொழில்நுட்பவியல் மற்றும் பராமரிப்பு | | |
| 1 | மோட்டார் வாகன வாயு பொருத்துநர் -தேசிய சான்றிதழ் | 12 | 3,4 |
| 2 | சாரதிப்பயிற்சி (பார வாகன) | 6 | Non |
| 3 | சாரதிப்பயிற்சி (இலகுரக வாகன) | 6 | **Non** |
| 4 | தன்னியக்க வாகன வர்ணம் பூசுபவர்-தேசிய சான்றிதழ் | 12 | 3,4 |
| 5 | தன்னியக்க வாகன தகர வேலைசெய்பவர்-தேசிய சான்றிதழ் | 12 | 3,4 |
| 6 | மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பம் - தேசிய சான்றிதழ் | 12 | 3,4 |
| 7 | முச்சக்கரவண்டி தொழில்நுட்பவியலாளர் | 6 | 3 |
| 8 | கட்டிட இயந்திர இயக்குநர் (ஸ்காவேட்டர், பெகோலோடர், மோட்டர் கிரைண்டர்) | 2 | 4,Non |
| 9 | மோட்டார் வாகன மின்னியல் தொழில்நுட்பம் - தேசியசான்றிதழ் | 24, 36 | 3,4 |
| 10 | மோட்டார் வாகன மின்னியல் தொழில்நுட்பம் -தேசிய சான்றிதழ் | 24 | 3,4 |
| 11 | விவசாய இயந்திர மற்றும் உபகரண தொழில்நுட்பம் - தேசிய சான்றிதழ் | 24 | 3 |
| | **மின்னியல், இலத்திரனியல், தொலைத் தொடர்புகள்** | | |
| 12 | மின்னிணைப்பாளர் -தேசிய சான்றிதழ் | 18 | 3,4 |
| 13 | மோட்டார் வாகன மின்னியலாளர் - தேசியசான்றிதழ் | 12 | 3,4 |
| 14 | வானொலி, தொலைக்காட்சி மற்றும் அதனோடு இணைந்த தொழில்நுட்பம்- தேசிய சான்றிதழ் | 24 | 3,4 |
| 15 | கையடக்க தொலைபேசி பழுதுபார்த்தல் -தேசிய சான்றிதழ் | 12 | 4,3 |
| 16 | வீட்டுமின் உபகரணங்கள் திருத்துநர் - தேசிய சான்றிதழ் | 24 | 3 |
| 16-1 | Peneumatic technician | 18 | 4 |
| | **தகவல் தொடர்பாடல் மற்றும் மல்டி மீடியா தொழில்நுட்பம்** | | |
| 17 | கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் உடன் CISCO IT Essential +A+ -தேசிய சான்றிதழ் | 12 | 4 |
| 18 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிற்நுட்பவியலாளர் -(NVQ Level 4 in ICT) | 12 | 4 |
| 19 | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம்-(NVQ 5 in ICT Additional Oracle Academy Java programming and base certification training) | 15 | 5 |
| 20 | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் சான்றிதழ் பாடநெறி (NVQ level 4in ICT) | 12 | 4 |
| 21 | CISCO Cerfified Network Associate (CCNA +NVA Level 4) | 12 | 4 |
| 22 | கணினி வடிவமைப்பாளர் - தேசிய சான்றிதழ் | 12 | 4 |
| 23 | கணினி வடிவமைப்பாளர் (வலது குறைந்தோருக்கான) -நாராஹேன்பிட | 12 | 4 |
| 24 | Web Designing and development (NVQ level 4) (கண்டி, கட்டுகஸ்தொட்டை, பத்தேகம) | 12 | 4 |
| | **ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை** | | |
| 25 | சமையலாளர் -தேசிய சான்றிதழ் | 12 | 3,4 |
| 26 | அறை பராமரிப்பாளர் தேசிய சான்றிதழ் | 12 | 3,4 |
| 27 | உணவு மற்றும் குடிபான சேவகர்/உபசாரகர்- தேசிய சான்றிதழ் | 12 | 3,4 |
| 28 | வரவேற்பாளர் -தேசிய சான்றிதழ் | 6 | 3,4 |
| | **இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம்** | | |
| 29 | இரத்தினக்கற்கள் பதித்தல் -தேசிய சான்றிதழ் | 12 | 4 |
| 30 | இரத்தினக்கற்கள் தொழில்நுட்பம் - தேசிய சான்றிதழ | 24 | 3,4 |
| | **தனிநபர் மற்றும் சமூக அபிவிருத்தி** | | |
| 31 | அழகுக்கலை கைவினைஞர்-தேசியசான்றிதழ்/டிப்ளோமா (நாராஹேன்பிட) | 6, 12 | 4,5 |
| 32 | அழகுக்கலை நிபுணர் -தேசிய சான்றிதழ் | 6 | 4,3 |
| 33 | சிகை அலங்கரிப்பாளர் - தேசியசான்றிதழ்/டிப்ளோமா (நாராஹேன்பிட) | 6 | 4 |
| 34 | சிகை அலங்கரிப்பாளர் -தேசிய சான்றிதழ் | 6 | 3 |
| 35 | முன்பள்ளி ஆசிரிய பயிற்சிநெறி -தேசிய சான்றிதழ் | 24 | 3 |
| 36 | குழந்தை பராமரிப்பு -தேசிய சான்றிதழ் | 12 | 4 |
| 36-1 | Elder Care - தேசியசான்றிதழ் | 12 | 3 |
| 36-2 | தொடர்பாடல் முறைமை பாடநெறி | 3 | Non |
| | **உணவு தொழில்நுட்பவியல்** | | |
| 37 | வெதுப்பக உற்பத்தியாளர் -தேசிய சான்றிதழ் | 12 | 3,4 |
| 38 | பழங்கள் மற்றும் மரக்கறி வடிவமைப்பாளர் | 12 | 3 |
| | **மரத்தளப்பாடம் தொடர்பான** | | |
| 39 | மரவேலை கைவினைஞர் | 12 | Non |
| 40 | மரவேலை கைவினைஞர் (தளபாடம்) -தேசிய சான்றிதழ் | 12, 24 | 3,4 |
| 41 | மரவேலை கைவினைஞர் (கட்டிடம்) -தேசிய சான்றிதழ் | 24 | 3,4 |
| | **புடவை மற்றும் ஆடைகள்** | | |
| 42 | ஆடை வடிவமைப்பாளர் -தேசிய சான்றிதழ் | 12 | 4,3 |
| 43 | அதிவேக தையல் இயந்திர தொழில்நுட்பம் -தேசிய சான்றிதழ் | 12 | 3,4 |
| 44 | அதிவேக தையல் இயந்திர இயக்குநர் -தேசிய சான்றிதழ் | 6 | 3,4 |
| 45 | தையல் (பெண்கள் மற்றும் சிறுவர்கள்) -தேசிய சான்றிதழ் | 12 | 2,3,4 |
| 46 | திரைச்சீலை வடிவமைப்பாளர் | 12 | Non |
| 47 | தையல் (ஆண்கள்) -தேசிய சான்றிதழ் | 12 | 3,4 |
| 48 | ஆடைத் தயாரிப்பு தரக் கட்டுப்பாட்டாளர்-தேசிய சான்றிதழ் | 12 | 3 |
| 49 | ஆடைத் தயாரிப்பு தரக் கட்டுப்பாட்டாளர்-தேசிய சான்றிதழ் | 12 | 3,4 |
| 50 | ஆடைத் தயாரிப்பு தரக் கட்டுப்பாட்டாளர்-தேசிய சான்றிதழ் (Koggala) | 12 | 4 |
| 51 | மேற்பார்வையாளர் | 24 | 4 |
| | **குளிரூட்டி மற்றும் வாயு சீராக்கி** | | |
| 52 | குளிரூட்டி மற்றும் வாயு சீராக்கி திருத்துநர் தொழில்நுட்பம்- தேசிய சான்றிதழ் | 24 | 3,4 |
| | **உலோக மற்றும் மென் பொறியியல்** | | |
| 53 | இயந்திரவியலாளர் | 12 | 3 |
| 54 | இயந்திரவியலாளர் (CNC Milling)-தேசிய சான்றிதழ் நாராஹேன்பிட | 12 | 4 |
| 55 | இயந்திரவியலாளர்-தேசிய சான்றிதழ் | 24 | 4,3 |
| 56 | இயந்திரவியலாளர் (CNC Milling&Lathe Machine Operator )-நியாகம, வந்தாறுமூலை | 12 | 4 |

| பாடநெறி இல. | தொழிற்பயிற்சி அதிகார சபையின் துறைகளுக்கேற்ப நடைபெறும் பாடநெறிகள் | பயிற்சிக்காலம் (மேலதிக பயிற்சியுடன்) | NVQ level |
|---|---|---|---|
| 57 | வெல்டர் -தேசிய சான்றிதழ் | 12, 24 | 3 |
| 58 | வெல்டர் | 12 | Non |
| 59 | காய்ச்சி இணைப்பாளர் -தேசிய சான்றிதழ் | 12 | 3 |
| | **கட்டடம் மற்றும் நிர்மாணம்** | | |
| 60 | அலுமினியம் பொருத்துநர் -தேசிய சான்றிதழ் | 12 | 3, 4 |
| 61 | கட்டிட நிர்மாண கைவினைஞர் -(மேசன்) -தேசிய சான்றிதழ் | 12,18 | 4, 3 |
| 62 | கட்டிட நிர்மாண கைவினைஞர் -( மேசன்) | 6 | 3 |
| 63 | நீர்க்குழாய் பொருத்துநர்-தேசிய சான்றிதழ் | 12,18 | 3,4 |
| 64 | உதவிக்கணிய அளவையாளர் (QS) தேசிய சான்றிதழ் | 12 | 4 |
| 65 | சூழல் அழங்கரிப்பாளர் தேசிய சான்றிதழ் | 12 | 3,4 |
| 66 | கட்டிடத் தொழில்நுட்பம் | 12 | 5 |
| 67 | கணிய அளவையாளர் (QS) -டிப்ளோமா சான்றிதழ் | 48 | 5,6 |
| | **குளிராக்கி மற்றும் வாயுசீராக்கி** | | |
| 68 | குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி திருத்துநர் -சிங்களம் (S) தமிழ் (T) | 6 | 3 |
| | **கடற்றொழில் மற்றும் நீரியல்வளம்** | | |
| 69 | வெளியிணைப்பு படகு இயந்திர திருத்துநர் -தேசிய சான்றிதழ் | 12 | 2,3,4 |
| 69-1 | Book Binder | 6 | 3 |
| | **விவசாயம்** | | |
| 70 | நாற்று நடுதல் மற்றும் கன்றுகளை நாட்டுதல் | 12 | Non |
| 71 | மரக்கறி மற்றும் பழ வகைகள் பதனிடல் | 12 | Non |
| | **தோற் பொருள் மற்றும் காலணி உற்பத்தி** | | |
| 72 | தோற் பொருள் உற்பத்தியாளர் (பாதணி, பைகள்)-தேசிய சான்றிதழ் | 12 | 3 |
| 73 | பாதணி உற்பத்தியாளர் (பாதணி, பைகள்)-தேசிய சான்றிதழ் | 12 | 3 |
| | **அலுவலக முகாமைத்துவம்** | | |
| 74 | செயலாண்மை பயிற்சி நெறி | 12 | 4 |
| 75 | தொழில்நுட்ப முகாமைத்துவம் டிப்ளோமா பாடநெறி (நாராஹேன்பிட) | 12 | Non |
| | **கடற்றொழில் மற்றும் சுற்றுலாத்துறை** | | |
| 76 | மோட்டார் படகு தொழில்நுட்பம் - தேசிய சான்றிதழ் | 12, 24 | 3 |
| | வேறு | | |
| 77 | ஆங்கிலம் மற்றும் மென்திறன் அபிவிருத்தி | 240 Hrs/300Hrs | 1,2 |

| | |
|---|---|
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC - அம்பாறை,<br>நிந்தவூர், அம்பாறை,<br>தொலைபேசி இல. : 067-2250196 | 3, 7, 12, 13, 17, 20, 22, 25, 26, 27, 32, 34, 27, 37, 45, 60, 77 |

| | |
|---|---|
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC - வவுனியா,<br>இல. 108, ஸ்டேசன் வீதி,<br>வைரவப்புளியம்குளம், வவுனியா<br>தொலைபேசி இல. : 024-2221617 | 17, 20, 22, 57, 60, 73, 77 |

| | |
|---|---|
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC –திருகோணமலை,<br>யொவுன் வீதி, கந்தளாய்,<br>தொலைபேசி இல. : 026-2234517 | 12, 20, 25, 26, 27, 37, 57, 60, 32, 34, 45, 77 |

| | |
|---|---|
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC - முல்லைத்தீவு,<br>மாங்குளம் வீதி, முல்லைத்தீவு,<br>தொலைபேசி இல. : 071-3641507 | 7, 12, 17, 20, 37, 45, 60, 77 |

| | |
|---|---|
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC - கிளிநொச்சி,<br>155 ஆம் கட்டை,<br>A 9 வீதி, கிளிநொச்சி,<br>தொலைபேசி இல: 021-2285686 | 07, 12, 17, 20, 32, 34, 36, 45, 57, 60, 77 |

| | |
|---|---|
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC - நுவரெலியா,<br>வெடபன் வீதி, மவுண்ட் மேரி கட்டிடம், நுவரெலியா,<br>தொலைபேசி இல. : 052-2223216 | 07, 09, 12, 17, 20, 25, 26, 27, 32, 34, 35, 45, 49, 60, 72, 77 |

| | |
|---|---|
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC –யாழ்ப்பாணம், 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம்,<br>இல 12, KKS வீதி, யாழ்ப்பாணம்.<br>தொலைபேசி இல. : 021-2227949 | 07, 12, 17, 20, 22, 25, 26, 27, 32, 34, 37, 57, 60, 72, 77 |
| உதவிப் பணிப்பாளர்,<br>APC கட்டிடம்,<br>வந்தாறுமூலை,<br>மட்டக்களப்பு,<br>தொலைபேசி இல. : 065-2240159 | 07, 12, 20, 32, 34, 45, 47, 56, 57, 60, 77 |
| உதவிப் பணிப்பாளர்,<br>மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம்,<br>மாரவில, புத்தளம்,<br>தொலைபேசி இல. : 032-2254110 | 07, 12, 13, 17, 20, 22, 25, 23, 27, 32, 34, 37, 45, 60, 77 |
| உதவிப் பணிப்பாளர்,<br>தேசிய தொழிற்பயிற்சி நிலையம்,<br>100, கந்தவல வீதி,<br>இரத்மலானை,<br>தொலைபேசி இல. : 011-2638850 | 52 |
| பிரதிப் பணிப்பாளர்,<br>தேசிய தொழிற்பயிற்சி நிலையம்<br>354,எல்விட்டிகல மாவத்தை,<br>நாராஹேன்பிட<br>தொலைபேசி இல. : 011-2592233 | 20 |

6-598

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரம், 1 ஆம் வகுப்பின் II ஆந் தரம் மற்றும் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்தினைக் கொண்ட அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை - 2017

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரம், 1 ஆம் வகுப்பின் II ஆந் தரம் மற்றும் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்தினையுடைய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை - 2017, பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கண்காணிப்பின்கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2017, யூலை மாதம் 22 மற்றும் 2017, யூலை மாதம் 23 ஆகிய வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. இப்பரீட்சை 2014.12.26 ஆந் திகதிய 1894/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப நடாத்தப்படும்.

3. மேற்குறிப்பிட்ட சேவைகளுக்கு உரித்துடையதாக நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை கீழ்வருமாறு அமையப்பெற்றுள்ளது :

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீட்டுப் பெயர் |
|---|---|---|
| 01 | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரத்தின் அலுவலர்களுக்கான வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT 1 (III) |
| 02 | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் II ஆந் தரத்தின் அலுவலர்களுக்கான வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT 1 (II) |
| 03 | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்தின் அலுவலர்களுக்கான வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT 1 (I) |

4. இப்பரீட்சை தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இச்சட்டங்களை மீறுமிடத்து ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டிய நிலை உருவாகும்.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் இணையத்தளத்தின் ஊடாக நிகழ்நிலை முறையில் (Online) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இன் மெனு தாவலினால் Examination உப மெனுவினைத் திறந்து தமக்கு உரிய பரீட்சையினைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பரீட்சை விண்ணப்பத்தினை நிரப்புவதற்கு முடியும். விண்ணப்பத்தினை நிரப்புதல் 2017, யூன் மாதம் 16 ஆந் திகதி மு. ப. 8.00 முதல் 2017, யூலை மாதம் 03 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணி வரையான காலப்பகுதியினுள் மட்டுமே முடியுமாக இருக்கும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- முதற்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றிய அலுவலர்கள் கீழ்க்குறிப்பிடும் வகையில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும் இதற்குப் பின்னரான தடவைகளில் அலுவலர்களினால் ஒரு பாடத்துக்கு மேல் தோற்றுவதாயின் ரூபா 500 ஐப் பரீட்சைக் கட்டணமாகவும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் கட்டணமாக ரூபா 300 இனையும் செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தினை இலங்கை பூராக அமைந்துள்ள எந்தவொரு தபாலகத்தின் மூலம் (உப தபாலகங்கள் தவிர) 'SLIDA' கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும் என்பதோடு அச்செலுத்தலிற்கு உரித்துடைய பற்றுச்சீட்டின் இலக்கத்தினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த தபாலகத்தில் 'SLIDA' கணக்கிற்குப் பணம் செலுத்துவதற்கு காசுக்கட்டளை விண்ணப்பத்தினை (அ. அ. சீ85) ஆம் இலக்கத்தினையுடைய மாதிரிப் படிவத்தினை நிரப்பும்போது, பணத்தினைப் பெற்றுக்கொள்பவர் 'SLIDA' எனவும், பணத்தினைப் பெற்றுக்கொள்பவரின் முகவரி என்னும் இடத்தில் உமக்கு உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரினையும் குறிப்பிடவும். (குறியீட்டுப் பெயர்கள் 03 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.)

மேலும் கணக்கிற்கு பணம் செலுத்தும்போது பணத்தினை அனுப்புபவராக விண்ணப்பதாரியின் பெயரினையும், பணம் அனுப்புபவரின் முகவரி என்னும் இடத்தில் விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினையும் குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தினை நிரப்புதல் வேண்டும்.

7. Online முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்கள் Submit செய்ததன் பின்னர் உரிய விண்ணப்பதாரியிடம் உறுதிப்படுத்தும் இலக்கமொன்று (Confirmation Number) பெற்றுக்கொடுக்கப்படும் என்பதோடு அவ்விலக்கத்தினை எதிர்வரும் தொடர்பு நடவடிக்கைகளுக்காக விண்ணப்பதாரி தன்னகத்தே வைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிரப்பப்பட்ட விண்ணப்பம் நிகழ்நிலையின் (Online) மூலம் அனுப்பியதன் பின்னர் கிடைக்கப்பெறும் இணையத்தளப் பக்கத்தில் காணப்படும் அறிவுரைகளைப் பின்பற்றுவதனால் தமக்குரிய பரீட்சை அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியும். அவ்வனுமதிப்பத்திரத்தினை அச்சிட்டு திணைக்களத் தலைவர் அல்லது அவர் தன் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதி அலுவலரொருவர் மூலம் தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தினைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிப்பது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் எழும்போது அது தொடர்பான விசாரணைக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத் தொலைபேசி இலக்கத்திற்கு (011-5980236) 2017, யூன் 16 ஆந் திகதி முதல் 2017, யூலை 03 ஆந் திகதி வரை வார நாட்களில் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையில் அழைப்பினை மேற்கொள்ளலாம்.

9. பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்ற அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முடியுமான வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறையை பெற்றுக்கொடுத்தல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அவசியப்படுமாயின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**.- பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறுகின்ற விதத்தில் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஒன்றினைச் சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்ய முடியும்.

11. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும் என்பதோடு குறித்த சேவைக்கு உள்வாங்கும் பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் அல்லது இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். போட்டிப் பரீட்சையின்றி இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு தான் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற பரீட்சை மொழி மூலத்தினை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

12. தான் விரும்பிய ஒவ்வொரு பாடத்திற்கான வெவ்வேறு மற்றும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான தடவைகளில் தோற்ற அலுவலரினால் முடியும்.

13. பரீட்சைப் பெறுபேறுகள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டதன் பின்னர் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் பெறுபேறுகள் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அப்பெறுபேறுகளுக்கு ஏற்ப குறித்த திணைக்களத் தலைவர்கள் அலுவலர்களின் சேவையினை உறுதிப்படுத்தல் மற்றும் பதவியுயர்வு நடவடிக்கைகளுக்கான பரிந்துரை முன்வைக்கப்படல் வேண்டும்.

14. **பரீட்சை நடைமுறைகள்**.- ஒவ்வோர் வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சைக்குத் தோற்ற முடியுமான அலுவலர்களுக்கான பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் கீழ்வருமாறு காணப்படுகின்றன :

14.1 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை (சேவைப்பிரமாணக் குறிப்பின் 13 ஆம் அட்டவணை) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அரச சேவைக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரத்துடைய அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

| பாடங்கள் | பாட இலக்கம் | புள்ளி | காலம் | சித்தியெய்துவதற்குப் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| தாபன விதிக்கோவை மற்றும் நிர்வாகம் | 01 | 100 | 3 மணித்தியாலம் | 40 |
| நிதிப்பிரமாணம் மற்றும் அரச பிரிவின் நிதி முகாமைத்துவம் | 02 | 100 | 3 மணித்தியாலம் | 40 |
| முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும் | 03 | 100 | 3 மணித்தியாலம் | 40 |

14.1.1 தாபன விதிக்கோவை மற்றும் நிர்வாகம் (பாட இலக்கம் - 01).- கீழ்க்காணப்படும் விடயங்களை உள்ளடக்கியதோர் வினாப்பத்திரமாகும் :

(1) அலுவலகம் மற்றும் வெளிக்கள நடவடிக்கையினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஒழுங்கமைப்பு

(2) தாபன விதிக்கோவையின் கீழ்க்குறிப்பிடப்படும் அத்தியாயங்கள் I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII

(3) அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்.- இவ்வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களைக் கொண்டுள்ளது :

14.1.2 *நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கப் பிரிவின் நிதி முகாமைத்துவம் (பாட இலக்கம் - 02).*- கீழ்க்காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையிலமைந்த வினாப்பத்திரமாகும் :

(அ) இலங்கையில் பிசுக்கால் ஆட்சி, அரச நிதி முகாமைத்துவம் தொடர்பிலான அறிக்கை அரசியலமைப்பின் ஏற்பாடுகள், அரச நிதி தொடர்பான பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு, நிதியம் என்பதன் விளக்கம், திரட்டு நிதி மற்றும் அதன் செயற்பாடுகள், ஒதுக்கீட்டுக் கணக்கின் நோக்கங்கள் மற்றும் ஒதுக்கீட்டு முறைகள், எதிர்பாராப் பின் நிகழ்ச்சிச் செலவு நிதியம், பிற நிதியங்களும் அவற்றின் செயற்பாடுகளும், அரச வருமானங்கள், நிதி அமைச்சரின் தத்துவங்களும் பணிகளும், திறைசேரியின் தத்துவங்களும் பணிகளும் ஆணைச்சீட்டுக்களும் கட்டு நிதி அதிகாரமும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தத்துவங்களும் பணிகளும், அரசாங்க செலவீனங்கள் மீதான குழு, அரசாங்க தொழில் முயற்சிகள் மீதான குழு.

(ஆ) கணக்கீட்டு உத்தியோகத்தர், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் வருவாய்க் கணக்கீட்டு அலுவலர்களை நியமித்தல், அவர்களின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்.

(இ) உள்ளகக் கணக்காய்வு.

(ஈ) அரச செவீனங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், ஒழுங்கமைப்பின் நோக்கங்கள் மற்றும் பணிகளை இனங்காணல், அரசாங்க கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் வேலை நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணல், அபிவிருத்தி செயற்திட்டங்கள், நிகழ்ச்சிகளைத் திட்டமிடல் மற்றும் மதிப்பிடுதல் மற்றும் முன்னிலைப்படுத்தல், வருடாந்த வருமானங்கள் மற்றும் செலவினம் பற்றிய மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் இறுதி முடிவினைப் பெறுதல்.

(உ) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்கள் செய்தல், வகைமாற்று நடவடிக்கைகளின் பிரயோகம், அரசாங்கப் பிரிவின் ஆளணியினர் மற்றும் சம்பள முகாமைத்துவம், மொத்தக் கிரய மதிப்பீடுகளும் மீளாய்வுகளும், குறைநிரப்பு மதிப்பீடு.

(ஊ) அரச சொத்துக்களின் நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்களும்.

(எ) நானாவித கணக்கு நடவடிக்கைகள்.

(ஏ) அரசாங்க கட்டுப்பாடு பொருட்டு பணிகளினைக் கையளித்தல்.

(ஐ) அரச நிதிகளின் பொறுப்பு மற்றும் வங்கிக் கணக்கு நடைமுறைகள்.

(ஒ) அரசின் வழங்கற் செயற்பாட்டு நடைமுறைகள், பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளைப் பெற்றுக்கொள்ளல், பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தொகுப்பு, நியமனங்கள், அதிகாரங்கள் மற்றும் பணிகள், பெறுகை மதிப்பீட்டின் செயற்பாட்டு நடைமுறைகள், வெளிநாட்டு நன்கொடைகள் மீது செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களின் முகாமைத்துவம். இவ்வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களினை உள்ளடக்கியுள்ளது:

14.1.3 *முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும் (பாட இலக்கம் - 03).*- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களின் அடிப்படையில் அமைந்ததோர் வினாப்பத்திரமாகும் :

(அ) முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்பு பற்றிய கோட்பாடுகள்

(ஆ) அக்கோட்பாடுகள் அரசப் பிரிவுகளில் தோற்றுவிக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள்

(இ) முகாமைத்துவம் தொடர்பான நவீன முறைமைகள் மற்றும் நுட்பங்கள்

இவ்வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களினை உள்ளடக்கியுள்ளது.

14.2 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் II ஆந் தரத்துக்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை (சேவைப் பிரமாணக் குறிப்பின் 14 ஆம் அட்டவணை).- இப்பரீட்சையில் தோற்றுவதற்காக இணைந்த சேவைகளுக்குரிய இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் வகுப்பின் II ஆந் தரத்தினையுடைய அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

| பாடங்கள் | | பாட இலக்கம் | புள்ளி | காலம் | சித்தியெய்துவதற்குப் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|---|
| அலுவலக முகாமைத்துவம் | | 04 | 100 | 1 மணித்தியாலம் | 40 |
| ஈ-அரசாங்க எண்ணக்கரு மற்றும் தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவம் | I ஆம் வினாப் பத்திரம் - பல்தேர்வு | 05-I | 40 | 1 மணித்தியாலம் | 16 |
| | II ஆம் வினாப் பத்திரம் - கட்டுரை | 05-II | 60 | 1 மணித்தியாலம் | 24 |

14.2.1 *அலுவலக முகாமைத்துவம் (பாட இலக்கம் - 04).*- அரசாங்கப் பிரிவின் அலுவலகம் மனித மற்றும் பௌதிக வளங்களின் முகாமைத்துவம் தொடர்பாக வழங்கப்படும் விடய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு பதிலளித்தல்

14.2.2 *ஈ - அரசாங்க எண்ணக்கரு மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம் (பாட இலக்கம் - 05)*

(அ) ***I ஆம் வினாப்பத்திரம்.***- *பல்தேர்வு (பாட இலக்கம் 05-I)* - ஈ-அரசாங்க முறையின் பரிணாமம், அதன் காலங்கள், ஈ-அரசாங்க அடிப்படைப் பிரிவுகள், ஈ-அரசாங்க சேவைகள் (E-service) மற்றும் ஈ-அரசாங்க கருத்திட்டங்கள், அரசாங்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் கட்டுமானம், ஈ-அரசாங்க முறைமையை வெற்றியடையச் செய்வதற்கான உறுதியான காரணிகள், ஈ-அரசாங்க முகாமைத்துவம், இணைந்து செயலாற்றும் தன்மை (Inter-operability) மற்றும் சேவை சார்ந்த கணினி வடிவமைப்பு (Service Oriented Architecture) ஈ-அரசாங்க முறை (E-Government) எண்ணக்கருவினுள் உள்ளடக்கப்படும்.

(ஆ) ***II ஆம் வினாப்பத்திரம்.***- *கட்டுரை (பாட இலக்கம் 05-II)* - தகவல் தொழில்நுட்பத்தின் வாழ்க்கை வட்டம், அதன் ஒவ்வோர் சந்தர்ப்பங்களிலுமான முக்கியத்துவம் மற்றும் அதற்குத் தேவைப்படும் வளங்களின் விசேட தன்மை, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், தகவல் தொழில்நுட்ப வளங்களின் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்ப செயற்திட்டங்களின் இடர்கள் மற்றும் அவற்றினைக் குறைத்துக்கொள்ளல் என்பன தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தினில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

14.3 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை (சேவைப் பிரமாணக் குறிப்பின் 15 ஆம் அட்டவணை).- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அரச சேவைக்குரிய இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்துடைய அலுவலர்களாக இருத்தல் வேண்டும் :

| பாடங்கள் | | பாட இலக்கம் | புள்ளி | காலம் | சித்தியெய்துவதற்குப் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|---|
| தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்ப செயற்றிட்டம் | (I) செயற்றிட்ட அறிக்கை | 06-I | 60 | - 30 | |
| | (II) செயற்றிட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தல் | 06-II | 40 | பரீட்சைக் குழு விடம் சமர்ப்பிப் பதற்கும் விடை யளித்தலுக்கும் 30 நிமிடங்கள் | 20 |

14.3.1 *செயற்றிட்ட அறிக்கை (பாட இலக்கம் - 06-I).*- இலங்கையின் அரச துறை அலுவலகங்களது வினைத்திறனை அதிகரிப்பதற்காக நடைமுறையில் உட்படுத்தக்கூடிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய 15,000 (பதினையாயிரம்) சொற்களுக்குக் குறையாத செயற்றிட்ட அறிக்கையொன்றைத் தயாரித்தல்.

14.3.2 *செயற்றிட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தல் (பாட இலக்கம் - 06-II).*- பரீட்சைக் குழுவிடம் சமர்ப்பித்தலும் பரீட்சைக் குழுவால் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு விடையளித்தலும்.

ஒவ்வோர் பரீட்சை மற்றும் பாடத்தினை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள நேர அட்டவணை கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது :

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடங்கள் | | பாட இலக்கம் | திகதி | நேரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில் நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரத்துடைய அலுவலர்களுக் கான வினைத் திறன்காண் தடை தாண்டற் பரீட்சை | தாபன விதிக்கோவை மற்றும் நிர்வாகம் | | 01 | 2017.07.22 | மு. ப. 9.00 - மதியம் 12.00 |
| | | நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அரசப் பிரிவின் நிதி முகாமைத்துவம் | | 02 | 2017.07.22 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | முகாமைத்துவம் மற்றும் தாபனங்கள் | | 03 | 2017.07.23 | மு. ப. 9.00 - மதியம் 12.00 |
| 02 | இலங்கை தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில் நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் II ஆந் தரத்துடைய அலுவலர்களுக் கான வினைத் திறன்காண் தடை தாண்டற் பரீட்சை | அலுவலக முகாமைத்துவம் | | 04 | 2017.07.22 | மு. ப. 9.00 - மு.ப. 10.00 |
| | | இ-அரசாங்க எண்ணக்கரு மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம் | I ஆம் வினாப் பத்திரம் - பல்தேர்வு | 05-I | 2017.07.22 | மு. ப. 10.30 - பி. ப. 12.30 |
| | | | II ஆம் வினாப் பத்திரம் - கட்டுரை | 05-II | | |
| 03 | இலங்கை தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில் நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்துடைய அலுவலர்களுக் கான வினைத் திறன்காண் தடை தாண்டற் பரீட்சை | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்றிட்டம் | செயற்றிட்ட அறிக்கை | செயற்றிட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் கையளிக்கும் திகதி தொடர்பாகவும் செயற்றிட்ட அறிக்கை சமர்ப்பிப்பது தொடர்பாகவும் விண்ணப்பப்படிவம் கையளிக்கும் இறுதித் திகதிக்குப் பின் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப் படும். | | |
| | | | செயற்றிட்ட அறிக்கையைச் சமர்ப்பித்தல் | | | |

15. இவ்வறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும், அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

16. இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2017, யுன் 01.

6-682

---

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையில் வகுப்பு 3 இன் தரம் III, வகுப்பு 3 இன் தரம் II, வகுப்பு 3 இன் தரம் I, வகுப்பு 2 இன் தரம் II வகுப்பு 2 இன் தரம் I என்பவற்றின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் - 2017

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையில் வகுப்பு 3 இன் தரம் III, வகுப்பு 3 இன் தரம் II, வகுப்பு 3 இன் தரம் I, வகுப்பு 2 இன் தரம் II வகுப்பு 2 இன் தரம் I என்பவற்றின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் - 2017 பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் மேற்பார்வையின்கீழ் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி தொடக்கம் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி வரை வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

2. (அ) இப்பரீட்சைகள் 2014.12.26 ஆந் திகதிய 1894/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைப் பிரமாணத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடாத்தப்படும்.

(ஆ) முன்னரான பதவியின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் வினைத்திறன்காண் தடைகள் தொடர்பாகக் குறிப்பிடாதவிடத்து அல்லது நியமனக் கடிதத்தின் வினைத்திறன்காண் தடைகள் தொடர்பாக குறிப்பிடாதவிடத்து, அவற்றைப் பூர்த்திசெய்யாத அலுவலர்கள் இருப்பின் உரிய வகுப்பில் உரிய தரத்திற்கு ஏற்புடையதான வினைத்திறன்காண் தடைகளை மேற்குறிப்பிடப்பட்டுள்ள சேவைப் பிரமாணக் குறிப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் மூன்று ஆண்டு (03) சலுகை காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

3. மேற்படி குறித்த சேவைகளுக்கு ஏற்புடையதாக நடாத்துவதற்கு உரியதான வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் பின்வருமாறாகும் :-

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீட்டுப் பெயர் |
|---|---|---|
| 01 | இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 இன் தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | SLICT3III |
| 02 | இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 இன் தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | SLICT3II |
| 03 | இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 இன் தரம் I இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | SLICT3I |
| 04 | இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | SLICT2II |
| 05 | இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | SLICT2I |

4. இப்பரீட்சை தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுதல், கீழ்ப்படிதல் வேண்டும். இந்தச் சட்டங்களை மீறினால் ஒழுக்காற்று அதிகாரியால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல் இணையத்தளம் (internet) ஊடாக கணினியுடன் நேரடித் தொடர்பு மூலம் (Online) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிர்வாகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இணையத்தளத்தின் மெனு பட்டியல் Examination உப மெனு பட்டியைத் திறந்து தமக்கு ஏற்புடையதான பரீட்சையைத் தெரிவுசெய்வதன் மூலம் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்தல் 2017, யூன் மாதம் 16 ஆந் திகதி மு. ப. 8.00 தொடக்கம் 2017, யூலை 03 ஆந் திகதி நள்ளிரவு 12.00 வரையிலான காலப்பகுதியில் மட்டும் மேற்கொள்ளலாம்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- முதல் முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ள அலுவலர்கள் பின்வருமாறு பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அதன் பின்னரான அமர்வுகளில் அலுவலர்களால் ஒரே அமர்வில் முழுப் பரீட்சைக்கும் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணமாக 300 ரூபாவும் என்ற வகையில் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் இலங்கை முழுவதும் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் (உப அஞ்சல் அலுவலகம் தவிர்ந்த) 'SLIDA' இற்குச் செலுத்த வேண்டுமென்பதுடன், செலுத்திய கட்டணத்திற்காக வழங்குகின்ற பற்றுச்சீட்டின் இலக்கத்தைப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் உள்ளடக்குதல் வேண்டும். உரிய அஞ்சல் அலுவலகத்தில் 'SLIDA' கணக்கில் பணம் செலுத்துகையில் இந்த நாட்டு இலத்திரனியல் காசுக் கட்டளை விண்ணப்பப்படிவத்தை (அ. அ. சீ. 85) நிரப்பும்போது, பணம் பெறுபவராக, 'SLIDA' உம், பணம் பெறுபவரின் முகவரி என்ற இடத்தில் உங்களுக்கு உரியதான பரீட்சையின் குறியீட்டுப் பெயரையும் குறிப்பிடவும். (குறியீட்டு பெயர்கள் பந்தி 03 இல் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.)

மேலும் கணக்கில் பணம் செலுத்தும்போது பணம் அனுப்புபவராக விண்ணப்பதாரியின் பெயரையும், பணம் அனுப்புபவரின் முகவரி என்ற இடத்தில் விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

7. கணினியுடன் நேரடித் தொடர்பு மூலம் (Online) பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பங்களை Submit செய்த பின்னர் உரிய விண்ணப்பதாரியிடம் உறுதிப்படுத்தும் இலக்கம் (Confirmation Number) வழங்கப்படுவதுடன், அதனை எதிர்காலத்தில் விபரம் அறியும் நடவடிக்கைகளின் பொருட்டு விண்ணப்பதாரி தம்வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பதாரியால் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் கணினியுடன் நேரடித் தொடர்பு மூலம் (Online) சமர்ப்பித்த பின்னர் இணையத்தளத்தில் உள்ள ஆலோசனைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் தமக்குரிய பரீட்சை அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த அனுமதி அட்டை அச்சிடப்பட்டு திணைக்களத் தலைவர் அல்லது அவரால் தமது அதிகாரத்தைக் கையளித்துள்ள பிரதிநிதித்துவ அலுவலரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் சமர்ப்பிக்கும் நடைமுறை தொடர்பில் ஏதேனும் பிரச்சினை ஏற்படின் அது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும். 2017, யூன் மாதம் 16 ஆந் திகதி தொடக்கம் 2017, யூலை 03 ஆந் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் மு. ப. 8.30 தொடக்கம் பி. ப. 4.30 வரை தொடர்புகொள்ளலாம்.

9. பரீட்சை அனுமதி அட்டை பெற்றுள்ள அலுவலர்கள் பரீட்சையில் தோற்றக்கூடியதாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்த உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமாயின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக உறுதிப்படுத்திக்கொள்ளலாம். பரீட்சைக்கு சமூகமளித்தலின் பொருட்டு பிரயாணச் செலவுகள் செலுத்தப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் பொருட்டும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடைகின்றவாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் எழுத்தாவணங்களில் ஒன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களைச் சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்த உரிமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் பிரகாரம் இரத்துச் செய்யலாம்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன், உரிய சேவையில் சேர்வதற்காக பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அலுவலர்களுக்கு முடியும். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குச் சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12. தாம் விரும்புகின்றவாறு ஒவ்வொரு பாடங்களுக்கும் வெவ்வேறாகவும், ஒவ்வொன்றுக்கு வேறுபட்ட அமர்வுகளிலும் தோற்றுவதற்கு அலுவலர்களுக்கு முடியும்.

13. பரீட்சைப் பெறுபேறுகள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கிய பின்னர், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் பெறுபேறுகளை பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அந்தப் பெறுபேறுகளின்படி திணைக்களத் தலைவர்கள் அலுவலர்களின் சேவை நிரந்தரப்படுத்தல் மற்றும் தரமுயர்வுகள் என்பவற்றுக்கான பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

14. **பரீட்சைத் திட்டம்**.- ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பொருட்டும் தோற்றுகின்ற அலுவலர்களுக்கான பாடங்களும் பாடவிதானங்களும் பின்வருமாறாகும் :-

14.1 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (சேவைப்பிரமாணக் குறிப்பில் 8 ஆவது அட்டவணை) இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் III இல் உள்ள அலுவலராதல் வேண்டும்.

| பாடங்கள் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தியெய்வதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| தாபன விதிக்கோவை | 01 | 100 | 01 மணித்தியாலம் | 40 புள்ளிகள் |
| நிதி ஒழுங்குவிதிகள் | 02 | 100 | 01 மணித்தியாலம் | 40 புள்ளிகள் |

14.1.1 *தாபன விதிக்கோவை (பாட இலக்கம் - 01).*- தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொடர்பாக அரச அலுவலருக்குரிய அடிப்படை அறிவைப் பரீட்சித்தல் இதன்போது எதிர்பார்க்கப்படுகிறது. வினாத்தாள் சுருக்கமான வினாக்களையும் கட்டமைவு முறையிலான வினாக்களையும் கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.1.2 *நிதி ஒழுங்குவிதிகள் (பாட இலக்கம் - 02).*- அரசாங்க அலுவலகங்களில் பிரயோகிக்கின்ற நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான அடிப்படை அறிவு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டுப் புத்தகங்களில் அலுவல்கள் தொடர்பான அறிவு மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான அடிப்படை அறிவை அளவிடுதல் எதிர்பார்க்கப்படுகிறது. வினாத்தாள் சுருக்கமான வினாக்களையும் கட்டமைவு முறையிலான வினாக்களையும் கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.2 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் II இற்கு உரியதான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (சேவைப்பிரமாணக் குறிப்பில் 9 ஆவது அட்டவணை) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் II இல் உள்ள அலுவலராதல் வேண்டும் :

| பாடங்கள் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தியெய்வதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 1. அலுவலக முறைகள் மற்றும் நடைமுறைத் திட்டம் | 03 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 04 | 100 | 03 மணித்தியாலம் | 40 |

14.2.1 *அலுவலக முறைகள் மற்றும் நடைமுறைத் திட்டம் (பாட இலக்கம் 03).*- அரசாங்க அலுவலகங்களில் பிரயோகிக்கும் அலுவலக முறைகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சித்தல் மற்றும் அவற்றைப் பிரயோகிப்பதில் உள்ள ஆற்றலைப் பரீட்சித்தலும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வினாத்தாள் கட்டமைவு முறையிலான வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.2.2 *தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (பாட இலக்கம் - 04).*- அரசாங்க அலுவலகங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பொதுவான எண்ணக்கருக்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைச் சிறந்த முறையில் பிரயோகித்தல் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படும்.
(அரசாங்க நிறுவனங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பிரயோகிக்கும் முறை, கணினி வலையமைப்பு, தரவு தொடர்பாடல் தொடர்பான சிறந்த அறிவு, பொதுவான நோக்க மென்பொருள் தொடர்பான அறிவு, விசேடமாகப் பயன்படுத்தும் மென்பொருள், தரவு பாதுகாப்பும் மென்பொருள்களின் பாதுகாப்பும் கணினி முறைமைகளில் தொடர்ச்சியாக சேவைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தரவு பாதுகாப்பை அதிகரிப்பதற்கு மேற்கொள்ள முடியுமான அடிப்படை நடைமுறைகள்) :
இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் :
பகுதி I - பல்தேர்வு வினாத்தாளாகும். காலம் : 01 மணித்தியாலம் - (40 புள்ளிகள்)
பகுதி II - கட்டுரை வடிவிலான வினாத்தாளாகும் : காலம் : 02 மணித்தியாலம் - (60 புள்ளிகள்)

14.3 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் I இற்கு உரியதான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (சேவைப் பிரமாணக் குறிப்பில் 10 ஆவது அட்டவணை) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் I இல் அலுவலராதல் வேண்டும்.

| பாடங்கள் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 1. தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்பம் (எழுத்திலான பரீட்சை) | 05 | 50 | 01 மணித்தியாலம் | 20 |
| 2. தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்பம் (செய்முறையிலான பரீட்சை) | 06 | 50 | 01 மணித்தியாலம் | 20 |

14.3.1 *தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் - எழுத்திலான பரீட்சை (பாட இலக்கம் - 05) :*
(i) அலுவலக நடவடிக்கைகளின் பொருட்டு மென்பொருள் பிரயோகமும் அது தொடர்பான அறிவும்
(ii) கணினி வலையமைப்பு தொடர்பான அறிவு
(iii) கணினி மென்பொருள்களின்/வன்பொருள்களின் கோளாறுகளை அடையாளம் காணல் மற்றும் அவற்றைத் தீர்த்தல் தொடர்பான அறிவு
இவ்வினாத்தாள் சுருக்கமான வினாக்கள் மற்றும் கட்டுரை முறையிலான வினாக்களைக் கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.3.2 *தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் - செயன்முறைப் பயிற்சி (பாட எண் - 06):*
(i) அலுவலக நடவடிக்கைகளின்போது மென்பொருள் பயன்பாடு தொடர்பான நடைமுறை அறிவு
(ii) கணினி வலையமைப்பு தொடர்பான நடைமுறை அறிவு
(iii) கணினி மென்பொருள்/வன்பொருள் என்பவற்றில் குறைபாடுகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கான நடைமுறை அறிவு

14.4 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்குரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (சேவைப் பிரமாணக் குறிப்பின் II ஆம் அட்டவணை). இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களாயிருத்தல் வேண்டும்.

| பாடங்கள் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| தாபன விதிக்கோவை | 07 | 100 | 02 மணித்தியாலம் | 40 புள்ளிகள் |
| நிதிப்பிரமாணங்கள் | 08 | 100 | 02 மணித்தியாலம் | 40 புள்ளிகள் |

14.4.1 *தாபன விதிக்கோவை (பாட எண் - 07).*- தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள்/ அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொடர்பாக அலுவலரிடம் காணப்படுகின்ற பொதுவான அறிவையும், அவ்வறிவை நடைமுறை ரீதியாகப் பயன்படுத்தத்தக்க ஆற்றலும் இதன்போது பரிசீலிக்கப்படும். தாபன விதிக்கோவையின் I ஆவது, II ஆவது பாகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அத்தியாயங்களிலிருந்தும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது நடைமுறை விதிகளிலிருந்தும் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இவ்வினாப்பத்திரமானது குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.4.2 *நிதிப் பிரமாணங்கள் (பாட எண் - 08).*- அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்ற நிதிப் பிரமாணங்கள் தொடர்பான அறிவு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு பதிவேடுகளினது நடவடிக்கைகள் தொடர்பான விளக்கம் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான அறிவு என்பன மதிப்பீடு செய்யப்படும். இவ்வினாப்பத்திரமானது குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.5 இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இற்குரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (சேவைப் பிரமாணக் குறிப்பின் 12 ஆம் அட்டவணை) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக இணைந்த சேவைகளுக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இன் அலுவலராக இருத்தல் வேண்டும்.

| பாடங்கள் | பாட இலக்கம் | புள்ளிகள் | காலம் | சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 1. அலுவலக முறைகள் மற்றும் அலுவலக நடை முறைகள் | 09 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஈ-அரசு | 10 | 100 | 03 மணித்தியாலம் | 40 |

14.5.1 *அலுவலக முறைகள் மற்றும் அலுவலக நடைமுறை (பாட எண் - 09).*- அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற அலுவலக முறைகள் தொடர்பான பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் ஆற்றல் என்பன பரிசீலிக்கப்படும். இவ்வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்கள், குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.5.2 *தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஈ - அரசு (பாட எண் - 10) :*
பகுதி I - பல்தேர்வு வினாத்தாளாகும். காலம் : 01 மணித்தியாலம் - (40 புள்ளிகள்)
பகுதி II - கட்டமைவு முறையிலான கட்டுரை வினாத்தாளாகும். காலம் : 02 மணித்தியாலம் - (60 புள்ளிகள்)
(எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.)
இவ்வினாப்பத்திரமானது கீழே காட்டப்பட்டுள்ள விடயப் பரப்பை உள்ளடக்கியவாறு தயாரிக்கப்படும். மேலும் இவ்வினாப்பத்திரமானது இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும் :

(அ) தகவல் தொழில்நுட்ப கருத்திட்டச் சுற்றோட்டத்தின் அடிப்படைப் பகுதிகளான முறைமைகள் கற்கை, கட்டமைப்பு பகுப்பாய்வு, கட்டமைப்பு உருவாக்கம், அதற்கான மென்பொருள் உருவாக்கம், அவற்றைப் பரிசீலித்தல், பயன்படுத்துநரைப் பெற்றுக்கொள்ளும் பரிசோனைகள் என்பனவும் அவற்றுடன் தொடர்புடைய தொழில்நுட்பத் துறைகளான அல்கோரிதம், HTML, XTML, php, தரவு மற்றும் தகவல் பாதுகாப்பு, இடர் காரணமாக மீளவும் கட்டமைப்புக்களைத் தாபித்தல், புலமைச் சொத்துரிமை மற்றும் மென்பொருள் அனுமதிப்பத்திரம், சுதந்திர மற்றும் திறந்த மூலங்களிலான மென்பொருள்கள், இணைய 2.0 என்பன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவிற்குள் உள்ளடக்கப்படும்.

(ஆ) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அரச துறையில் பயன்படுத்தும் முறைகள், அரச துறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மிக வினைத்திறனான சேவைகளை வழங்குதல், ஈ-அரச முறைமைகளுக்குத் தேவையான அடிப்படை தொழில்நுட்பத் தேவைப்பாடுகள், அரச தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினது ஆகக்கூடிய கட்டமைப்பிற்கான அடிப்படை அம்சங்கள், ஈ-அரச கட்டமைப்பிற்கான அடிப்படை அம்சங்கள், Inter-operability என்பன ஈ-அரசு என்ற பகுதிக்குள் உள்ளடக்கப்படும்.

ஒவ்வொரு பரீட்சையினதும் ஒவ்வொரு பாடங்களும் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கால அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது :

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட எண் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் III இற் குரிய அலுவலர் களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | தாபன விதிக் கோவை | 01 | 2017.07.23 | மு. ப. 9.00 - மு. ப. 10.00 |
| | | நிதிப் பிரமாணம் | 02 | 2017.07.23 | மு. ப. 10.30 - மு. ப. 11.30 |
| 02 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் II இற்குரிய அலுவலர்களுக் கான வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | அலுவலக முறைகள் மற்றும் நடைமுறைகள் | 03 | 2017.07.29 | பி. ப. 1.00 - பி. ப. 3.00 |
| | | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 04 | 2017.07.29 | மு. ப. 9.00 - ந. ப. 12.00 |
| 03 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் I இற்குரிய அலுவலர்களுக் கான வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (எழுத்துமூலப் பரீட்சை) | 05 | 2017.07.30 | மு. ப. 9.00 - மு. ப. 10.00 |
| | | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (செயன்முறைப் பரீட்சை) | 06 | 2017.07.30 | மு. ப. 10.30 - மு. ப. 11.30 |
| 04 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்குரிய அலுவலர்களுக் கான வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | தாபனவிதிக் கோவை | 07 | 2017.07.30 | மு. ப. 9.00 - மு. ப. 11.00 |
| | | நிதிப் பிரமாணம் | 08 | 2017.07.30 | மு. ப. 11.30 - பி. ப. 1.30 |
| 05 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இற்குரிய அலுவலர்களுக் கான வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | அலுவலக முறைகளும் நடைமுறை களும் | 09 | 2017.07.30 | பி. ப. 1.00 - பி. ப. 3.00 |
| | | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஈ - அரசு | 10 | 2017.07.30 | மு. ப. 9.00 - ந. ப. 12.00 |

15. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும், இணைந்த சேவைகள் பணிப்பாளரது தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

16. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளது.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2017, யூன் 01.
6-683

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**
**பெறுகை அறிவித்தல்**

**புத்தளம் வழித்தடம் மற்றும் களனி வெலி வழித்தடம் ஆகியவற்றிலுள்ள பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பயணிகள் பெட்டிகள் மற்றும் சாமான்பெட்டிகளை அகற்றல்**
SRS/ F /7238

புத்தளம் வழித்தடம் மற்றும் களனி வெலி ஆகியவற்றிலுள்ள பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பயணிகள் பெட்டிகள் மற்றும் சமான் பெட்டிகளை அகற்றுவதற்காக இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக்குழுத் ( உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார்.

அமைவிடங்கள் பின்வருமாறு.-

1. புத்தளம் வழித்தடம் - பாலவி தளம்
2. புத்தளம் வழித்தடம் - நாத்தண்டிய தளம்
3. புத்தளம் வழித்தடம் - கொச்சிக்கடை தளம்
4. புத்தளம் வழித்தடம் - காக்காப்பள்ளி தளம்
5. புத்தளம் வழித்தடம் - பங்கதெனிய தளம்
6. புத்தளம் வழித்தடம் - மதுரங்குளி தளம்
7. புத்தளம் வழித்தடம் - புத்தளம் தளம்
8. புத்தளம் வழித்தடம் - லுணுவில தளம்
9. புத்தளம் வழித்தடம் - மாதம்பை தளம்
10. கே. வி. வழித்தடம் - மருதானை தளம்
11. கே. வி. வழித்தடம் - தெமட்டகொடை தளம்
12. கே. வி. வழித்தடம் - மாளிகாவத்த தளம்

2. 2017.06.22 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலை மனுக்கள் மூடப்படும்.

3. 10,000 ரூபாவை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்திய பின்னர் 2017.06.21 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையும், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

